தமிழ்நாடு தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண். 032148/சி3/2022, நாள். 13.04.2023.

பொருள்: தொடக்கக் கல்வி - தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் அரசு / ஊராட்சி/ நகராட்சி/ மாநகராட்சி மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளுக்கு 2022-2023-ஆம் ஆண்டிற்கான சிறந்த பள்ளிக்கான கேடயங்கள் வழங்குதல் - பள்ளிகளை தேர்ந்தெடுத்தல் - அறிவுரைகள் வழங்குதல் - சார்ந்து.

பார்வை:

1 அரசாணை (நிலை) எண். 190, பள்ளிக் கல்வித்துறை, நாள். 04.06.1998.

2 அரசாணை (நிலை) எண்.137, பள்ளிக் கல்வித்துறை, நாள். 20.05.1999.

3 அரசாணை (நிலை) எண்.73 பள்ளிக் கல்வித் (எஸ்.2) துறை, நாள். 20.03.2008.

4 அரசாணை (நிலை) எண் 151, பள்ளிக்கல்வித்(SE1(1)துறை, நாள் 09.09.2022.

5 அரசாணை (நிலை) எண் 172, பள்ளிக்கல்வித்(SE4(1)துறை, நாள் 30.09.2022.

6 தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.028875/சி2/2021, நாள் 21.02.2022 மற்றும் 01.12.2022.

****************

பார்வை 3ல் காணும் அரசாணையின்படி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்விப் பணியில் முன்னேற்றம் காணும் பொருட்டும், பள்ளிகளிடையே போட்டி மனப்பான்மையினை ஊக்குவிக்கும் பொருட்டும், ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திலுள்ள 3 சிறந்த பள்ளிகளைத் தேர்வு செய்து மாவட்ட வாரியாக சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 6ல் காணும் தொடக்கக் கல்வி இயக்குநரின் 21.02.2022 நாளிட்ட செயல்முறைகளின்படி பெறப்பட்ட சிறந்த பள்ளிகள் தேர்வு பட்டியலின்படி 2021-2022 ஆண்டிற்கென 38 மாவட்டங்களுக்கு 3 சிறந்த பள்ளிகள் வீதம் 114 கேடயங்கள் சிறந்த பள்ளி தலைமையாசிரியர்களிடம் மாண்புமிகு பள்ளிக் கல்வித்

துறை அமைச்சர் அவர்களால் 03.12.2022 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டிடத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது 2022 - 2023 ஆம் ஆண்டிற்கு ஒரு மாவட்டத்திற்கு 3 சிறந்த பள்ளிகளைத் தேர்வு செய்து சுழற்கேடயங்கள் வழங்கிட பள்ளிக் கல்வித் துறை நிர்வாக சீரமைப்பு அரசாணைக்கேற்பவும் கீழ்க்கண்டவாறு முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் குழு அமைத்து, அக்குழுவின் மூலம் பள்ளிகள் தேர்ந்தெடுப்பதற்கான பின்வரும் தேர்வு மதிப்பீட்டு பட்டியலின்படி தரக்குறியீட்டு மதிப்பெண் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் அரசு / ஊராட்சி/ நகராட்சி/ மாநகராட்சி மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் மாவட்ட அளவில் தரமதிப்பீட்டில் முதல் மூன்று இடங்களை பெறும் பள்ளிகளையே சிறந்த பள்ளிகளாக தேர்வு செய்யப்படவேண்டும்.

சிறந்த பள்ளிகளைத் தேர்வு செய்யும் குழு

| | | |
|---|---|---|
| 1. | முதன்மைக் கல்வி அலுவலர் | தலைவர் |
| 2. | மாவட்ட கல்வி அலுவலர்(தொடக்கக் கல்வி) (மாவட்டத்தில் 2 பணியிடங்கள் எனில் இருவர்) | செயலர் |
| 3. | பணியில் மூத்த வட்டாரக் கல்வி அலுவலர் | உறுப்பினர் 1 |
| 4. | தலைமையிடத்து BRC மேற்பார்வையாளர் (பொறுப்பு) | உறுப்பினர் 2 |

தேர்வு மதிப்பீட்டு பட்டியல்

| வ. எண் | சிறந்த பள்ளிகளுக்கான தரக் குறியீடுகள் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | பள்ளியில் மாணவர் சேர்க்கை அதிகரிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் | 10 |
| 2 | பள்ளியில் எண்ணும் எழுத்தும் இயக்கம் சிறப்பாக நடைபெறுதல் | 10 |
| 3 | மாணவர்களின் வாசித்தல், எழுதுதல், கணிதத் திறன் சார்ந்த கற்றல் அடைவுத் திறன் | 10 |
| 4 | பள்ளியில் மாணவர் மையக் கற்றலுக்கான சூழலுக்கு முக்கியத்துவம் தருதல் | 10 |

| | | |
|---|---|---|
| 5 | பள்ளியில் மாணவர்களின் கல்வி இணைச் செயல்பாடுகள் வளர்ப்பதில் முக்கயத்துவம் தருதல் | 10 |
| 6 | கற்றல் கற்பித்தலில் குறைந்தபட்சம் 5 புதிய உத்திகளைப் பயன்படுத்துதல் | 10 |
| 7 | மாணவர்களின் பன்முகத்திறன் வெளிப்பட வாய்ப்பு | 10 |
| 8 | பள்ளியின் உட்கட்டமைப்பு வசதி | 10 |
| 9 | பாதுக்காக்கப்பட்ட குடிநீர் வசதி | 10 |
| 10 | கழிப்பறை வசதி | 10 |
| 11 | பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் SMC உறுப்பினர்களுடன் கொண்டுள்ள சுமூக தொடர்பு மற்றும் பள்ளி அடைந்த வளர்ச்சி | 10 |
| 12 | பள்ளியின் வளர்ச்சியில் சமுதாயத்தின் பங்களிப்பு மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சியில் பள்ளி எடுத்து கொண்ட பங்களிப்பு | 10 |
| 13 | மன்ற செயல்பாடுகளில் பள்ளியின் ஈடுபாடு | 10 |
| 14 | இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் கற்றலை எளிமைப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளும் புதிய நுட்பங்கள் | 10 |
| 15 | இப்பள்ளியில் காணப்படும் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள் | 10 |
| | மொத்தம் | 150 |

| | | |
|---|---|---|
| தர மதிப்பீடு: | 135-150 வரை | ☆ ☆ ☆ |
| | 112-135 வரை | ☆ ☆ |
| | 112க்குக் கீழ் | ☆ |

மேற்கண்ட ஆய்வுக்குழு ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று பள்ளிகளை திடீர் பார்வையிட்டு தேர்வு மதிப்பீட்டு பட்டியலின்படி தரமதிப்பீட்டில் மாவட்ட அளவில் முதல் 3 இடங்களை பெறும் பள்ளிகளையே சிறந்த பள்ளிகளைத் தேர்வு செய்யப்பட வேண்டும் எனவும், இதற்கு முன்னர் சென்ற

ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட பள்ளியினை மீளவும் தேர்வு செய்யக்கூடாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட அறிவுரைகளின்படி 2022 - 2023 ஆம் ஆண்டிற்கு அரசு / ஊராட்சி/ நகராட்சி/ மாநகராட்சி மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் முதல் மூன்று இடங்களை பெறும் பள்ளிகளை எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் தேர்வு மதிப்பீட்டு பட்டியலின் அடிப்படையில் தேர்வு செய்து, இணைக்கப்பட்ட படிவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 3 இடங்களை பெறும் சிறந்த பள்ளிகளின் பெயர் பட்டியலினை 26.04.2023 க்குள் தவறாமல் இவ்வியக்கக மின்னஞ்சல் முகவரிக்கு (aodeech@gmail.com) அனுப்புமாறும், தேந்தெடுக்கப்பட்ட பள்ளிகளின் பெயர் பட்டியலினை 28.04.2023 க்குள் விரைவு அஞ்சலில் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: சிறந்த பள்ளிகளை தேர்ந்தெடுப்பதற்கான
மதிப்பீட்டு பட்டியல் மற்றும் படிவம்.

தொடக்கக் கல்வி இயக்குநர்.

13.04.23

பெறுநர்:

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி).

படிவம்

<u>முதல் மூன்று இடங்களை பெறும் சிறந்த பள்ளிகளின் பெயர் பட்டியல்</u>

மாவட்டம் :

| வ.எண். | ஒன்றியத்தின் பெயர் மற்றும் தொடக்கக் கல்வி மாவட்டம் | பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | பெற்ற தர மதிப்பீடு | தலைமை ஆசிரியர் பெயர் | கைபேசி எண் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

முதன்மைக் கல்வி அலுவலர்
(கையொப்பம் முத்திரை மற்றும் தேதியுடன்)